**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.11/2017**

**Prosecution Witnesses : 6**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயகொடி | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(A1,4 present. A2,3 absent.PFA.)
**12.07.2024**
**முதல் விசாரணை**

நான் சிந்துபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகளில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். சுமார் 10 வருடங்களுக்கு நான் சொந்த வேலையாக செம்பட்டிக்கு சென்றபோது போலிசார் என்னிடம் மேற்படி கையெழுத்தை வாங்கினார்கள். எதற்காக என்று தற்போது நினைவு இல்லை. மேற்படி கையெழுத்துக்கள் மட்டும் அ.சா.ஆ.3, 4 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் கு.வி:**

கடந்த 24.09.2027 அன்று சிந்துபட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் இந்த வழக்கு 2 வது எதிரியை எனது மற்றும் சாட்சி தங்கராமன் ஆகியோர்கள் முன்னிலையில் கைது செய்து விசாரித்த போது 2 வது எதிரி சோங்கம்மாள் எவ்வித அச்சுறுத்தலும் இன்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதன் தொடர்ச்சியாக வழக்கு சொத்தினை போலிசார் கைப்பற்றி அதில் நாங்கள் இருவரும் கையெழுத்து இட்டோம் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**